உ

ஓம்

## இணுவில் அருள்மிகு

## பரராசசேகரப்பிள்ளையார்

# கீர்த்தனைகளும் பதமும்



ஆக்கம் :

கலாபூஷணம், பண்டிதை

திருமதி.வை.கணேசபிள்ளை

(இணுவில் தெற்கு)

உ
ஓம்

இணுவில் அருள்மிகு

பரராசசேகரப்பிள்ளையார்

# கீர்த்தனைகளும் பதமும்



ஆக்கம்:

கலாபூஷணம் பண்டிதை
திருமதி.வை.கணேசபிள்ளை
(இணுவில் தெற்கு)

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூல் | : | பரராசசேகரப்பிள்ளையார் கீர்த்தனைகளும் பதமும் |
| நூலாசிரியர் | : | திருமதி.வை.கணேசபிள்ளை |
| வெளியீடு | : | திருநெறிய தமிழ்மறைக் கழகம்<br>ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோவில்.<br>இணுவில் தெற்கு. |
| திகதி | : | 04-03-2019 |
| பதிப்பு | : | சுடர்நிலவு கிரபிக்ஸ், இணுவில். |
| பக்கம் | : | X + 22 |



திருவருள்மிகு

**இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோயில்**

THIRUVARUL MIKU

INUVIL SRI PARARAJASEGARAP PILLAIYAR THIRUKKOVIL

Inuvil South,
Inuvil.

சிவஸ்ரீ வை.சோமாஸ்கந்தக்குருக்கள்
சிவஸ்ரீ சோ. அரவிந்தக்குருக்கள்

இணுவில் தெற்கு
இணுவில்

---

# ஆசிச்செய்தி

எங்கள் இணுவில் ஊரைச் சேர்ந்த கலாபூஷணம் பண்டிதை திருமதி.வை.கணேசபிள்ளை அவர்கள் இணுவில் தெற்கு பரராஜசேகரப் பிள்ளையார் கீர்த்தனைகள் என்ற அரிய பக்திநூலை வெளியிடுகின்றார். இவர் பரராஜசேகரப் பிள்ளையார் மீது கொண்ட பக்தியினாலும் விருப்பத்தினாலும் இக்கீர்த்தனை நூலை இயற்றியிருக்கின்றார்கள். இந்நூல் வெறும் பாடலாக இல்லாது கீர்த்தனை மரபுக்கு ஏற்ப பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற மரபில் இராகத்தோடு இயற்றப் பட்டிருகிறது. இதனைப் படிப்பவர்கள் ஒரு சிறந்த அனுபவத் தைப் பெறுவார்கள். இவரது இந்தப் பணிகள் மேன்மேலும் வளர எல்லாம் வல்ல ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையாரின் அனுக் கிரகத்தையும் அடியார்கள் எல்லோரினதும் ஊக்குவிப்பும் கிடைக்க எல்லாம் வல்ல ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையாரை வேண்டுகின்றோம்.

**வை.சோமாஸ்கந்தக் குருக்கள்**

# வாழ்த்துச்செய்தி

கலாபூஷணம் பண்டிதை திருமதி.வைகுந்தம் கணேசபிள்ளை அவர்களின் வெளியீடான பக்திக் கீர்த்தனைகள் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். பரராஜசேகரப் பிள்ளையார், இணுவில் கந்தசுவாமியார், தில்லை நடராஜப் பெருமான் ஆகிய குலதெய்வங்கள் மீது பாடப்பெற்ற இப் பக்திக் கீர்த்தனைகள் கேட்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள் பவையாகும். இப்பக்திக் கீர்த்தனைகள் மனமுருகிப் பாடுவதற்கு மட்டுமல்ல பரதநாட்டியக் கலைக்கான பாடல்களாகவும் பயன் படுத்தக்கூடியவையாகும். எனவே பல நோக்கங்களை நிறைவு செய்யும் பண்புடையவையாக இக்கீர்த்தனைகள் காணப்படுகின்றன என்பது பெருமைக்குரியதாகும்.

பாடலாசிரியர் கலாபூஷணம் திருமதி.வை.கணேசபிள்ளை அவர்கள் பாடல்களை இயற்றுவதில் ஆளுமை கொண்டவராவார். அதன் காரணமாகவே இணுவில் மக்களால் வாழ்த்தி வழங்கப்படும் பெருமளவான வாழ்த்துப் பாமாலைகள் இவரால் இயற்றப்பட்டவை யாகவே உள்ளன.

எந்தவொரு விடயத்திற்கும் வாழ்த்துப் பாமாலைகள் தேவைப் படும்போது நாமெல்லோரும் திருமதி.வை.கணேசபிள்ளை அவர் களை அணுகுவோம். அவர் சந்தம், பல்லவி என்பன விலகாமல் எந்தவொரு கீர்த்தனையையும் இயற்றித்தரும் ஆற்றல் கொண்டவ ராக விளங்குகின்றார். இதுவே எமக்கிருக்கும் பலமாகும். பண்டிதை அவர்கள் தான் பெற்றுக்கொண்ட அறிவினாலும் அனுபவத் தினாலும் கீர்த்தனைகளை பக்திபூர்வமாகவும் ஜனரஞ்சகமாகவும் ஆக்கித் தருவது வழக்கம். இத்தகைய அவரது பாடலாக்கும் ஆற்றல் இன்று பல கீர்த்தனைகளை உருவாக்கி வெளியிடும் ஆற்றலை

உயர்த்தியிருக்கின்றது எனக் கூறினால் அது மிகையாகாது. நாட்டிய நாடகங்கள், கவிதைகள், கட்டுரைகள், கீர்த்தனைகள் என அவரது ஆக்கங்கள் எல்லாம் எமது சமூகத்தை அவர்பால் அக்கறை கொள்ளச் செய்துள்ளன.

இது அவர் பொறுப்பாகவிருக்கும் அறநெறிப் பாடசாலையின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தியிருப்பதுடன் அதனை நோக்கிவரும் மாணவர் எண்ணிக்கையையும் அதிகரித்துள்ளது. இது அவரது வளர்ச்சிக்கு மேலும் ஊக்கமளித்து கல்வியுலகில் அவரது பெருமையை மேலும் உயர்த்த வேண்டுமென்று எல்லாம் வல்ல பரராஜசேகரப் பெருமானை இறைஞ்சி எனது பாராட்டினையும் வாழ்த்தினையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**பேராசிரியர் க.தேவராஜா**

தலைவர், சுற்றுலாப் பணியகம்,

வட மாகாணம்.

முன்னாள் பீடாதிபதி,

முகாமைத்துவக் கற்கைகள்,

வணிக பீடம்,

யாழ் பல்கலைக்கழகம்

# வாழ்த்துச்செய்தி

கலாபூஷணம் விருது பெற்றவரும் பண்டிதையுமாகிய திருமதி.வை.கணேசபிள்ளை அவர்கள் பல நூல்களை வெளி யிட்டுள்ளார். எழுத்தாற்றல் மிக்க இவர் இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் மீது கொண்ட அன்பின் நிமித்தம் அவரது எண்ணங்களை இசையுடன் பாடும் வண்ணம் கீர்த்தனை ரூப மாக வெளியிட்டுள்ளார். அவர் மேலும் இவ்வாறான நூல்களை வெளியிடவும் பல்லாண்டு காலம் வாழ்ந்து அவர் சேவை தொடரவும் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையாரது அருளையும் ஆசியையும் வேண்டுகின்றேன்.

**திருமதி.கோ.தேவதாசன்**
ஓய்வுநிலை இசை ஆசிரிய ஆலோசகர்

# வெளியீட்டுரை

எமது திருநெறிய தமிழ்மறைக் கழகமானது இருபத் தைந்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளது. கழகத்தின் பணி களில் ஒன்றாகச் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை இயங்கி வருகிறது. எமது கழகமானது ஆண்டு தோறும் “பரராசம்” என்ற நூலை வெளியிட்டு வருகிறது. மேலும் பல நூல்களையும் இறுவெட்டுக்களையும் வெளி யிட்டுள்ளது

இந்த வகையில் எமது கழகமானது, கழக அமைப் பாளரும், அறநெறிப் பொறுப்பாசிரியருமான பண்டிதை திருமதி.வைகுந்தம் கணேசபிள்ளை அவர்கள் எழுதிய பக்திப் பாடல்களான ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் கீர்த்தனைகளும் பதமும் என்ற பாடல் தொகுப்பினை (04-03-2019) சிவராத்திரி தினத்தில் வெளியிட்டு வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றது.

இவை இறுவெட்டாகவும் வெளிவர உள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம். மேலும் இவரது பணிகள் சிறக்க வாழ்த்துகின்றோம்.

**திருநெறிய தமிழ் மறைக் கழகம்,**

**ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில்.**

# என்னுரை

இணுவில் ஸ்ரீ பரராஜசேகர விநாயகப்பெருமான் எமது குல தெய்வம். ஏனைய அயலூரிலுள்ள தெய்வங்கள் மேல் பக்திப் பாடல்களாக, திருவூஞ்சல், பள்ளி எழுச்சி, பிள்ளைத் தமிழ் எனப் பலவற்றைப் பாடியும் எமது குலதெய்வத்தின் மேல் பாடா திருந்தது எனது மனக்குறையாக இருந்தது. எனவே ஸ்ரீ பரராஜ சேகர விநாயகப் பெருமான் மீது பத்துக் கீர்த்தனைகளை 2013இல் பாடிப் பதிப்பித்து வைத்திருந்தேன். வெளியிட முடிய வில்லை.

2018இல் முதுகலைமாணிப் பட்டப்படிப்புக்கான ஆய்வு ஒன்றினைச் செய்ய வந்த திருமதி.கஜிதா ஜெயகாந்தன் அவர் கள், எனது இலக்கியப் பணிகளை ஆய்வு செய்தார். அதில் கையெழுத்துப் பிரதியாக வைத்திருந்தவையும் ஆய்வுக்குட் படுத்தப்பட்டன. எனவே கையெழுத்துப் பிரதிகளை வெளியிடு மாறு வேண்டிக்கொண்டதன் பேரிலும் இக்கீர்த்தனைகளை முதலில் வெளியிடுவதாக முடிவு செய்தேன்.

இக்கீர்த்தனைகளுடன் கீர்த்தனை வடிவத்தில் தெய்வங் களின் மேல் எழுதப்பட்ட "பதம்" அதாவது தெய்வீகக் காதல் என்பவையும் சேர்த்து இருபது பாடல்கள் வெளிவருகின்றன.

"தில்லை நடராஜன் வருவானோடி" என்னும் பதம் 2002இல் சோபனா என்ற மாணவியின் நடன அரங்கேற்றத்திற்கு நடிக்க எழுதித்தரும்படி திருமதி.நந்தினி சிவராஜன் கேட்டபொழுது எழுதி அரங்கேற்றத்தில் இடம்பெற்றது. வீரமணி ஐயரால் பாராட்டப்பட்ட பாடல். இது போன்ற பத்துப் பதங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் என்னால் பாடப்பட்டவை. அறநெறி மாணவர் களால் சில நடிக்கப்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

சிவராத்திரி தினத்தில் இந்நூலை எமது திருநெறிய தமிழ் மறைக்கழகம் வெளியிட்டு வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். இதற்கு இசையமைத்துத் திருத்தங்கள் செய்து, இராகம் முதலிய வற்றை முதன்மை இசையாசிரியர் திருமதி. கோ.தேவதாசன் அவர்களும் அனுசன் ஆசிரியரும் இணைந்து செய்து தந் துள்ளார்கள். அவர்களுக்கு எனது நன்றிகள். மேலும் இந் நூலுக்கு ஆசியுரை தந்த சிவஸ்ரீ சோமாஸ்கந்த. அரவிந்தக் குருக்கள் அவர்கட்கும், வாழ்த்துரைகள் வழங்கிய பேராசிரியர் தேவராஜா அவர்கட்கும், இசை முதன்மையாசிரியர் திருமதி. கோ.தேவதாசன் அவர்கட்கும் எனது மனமார்ந்த நன்றிகள். வெளி யீட்டுரை தந்தும் வெளியிட்டு வைக்கும் எமது கழகத்தினருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

இந்நூலை அழகுற வடிவமைத்து உரிய காலத்தில் தந்துதவிய சுடர்நிலவு பதிப்பகத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். இப்பாடல்கள் விரைவில் இறுவெட்டாக வெளிவரப் பரராசசேகரன் அருள் புரிவான்.

**கலாபூஷணம் பண்டிதை**

**திருமதி.வைகுந்தம் கணேசபிள்ளை**

ஓய்வுநிலை ஆசிரியர்.

# காப்பு



## பல்லவி

விக்ன விநாயகன் இணுவிலுறையும் சக்தி கணபதி
ஐங்கரக் கணபதியே காப்பு.

## அனுபல்லவி

அப்பனும் அம்மையும் ஆனவன் ஆனைமுகன்
தப்பாமல் வரங்கள் தானளிக்கும் ஐயன்
(விக்ன விநாயகன்...)

## சரணம்

திரிபுரமெரித்தான் பாகமது உறையும்
அரிபடர்ந்த கண்ணாள் அம்பிகை பாலன்
அரியும் அயனும் வேண்ட அருள்சுரந்தான்
கரிமுகன் கஜமுகனைச் சங்கரித்த வீரன்
(விக்ன விநாயகன்...)

இராகம் - கல்யாணி

# உன் வண்ண முகம் கண்டேன்...

## பல்லவி

வானுயர்ந்த கோபுரத்தில் உன் வண்ணமுகம் கண்டேன்
தேனுந்து மலர்ப்பாதம் தந்தருள்வாய் கணபதியே

## அனுபல்லவி

அற்புதச் சிற்பமொடு அருளுருவம் நான் கண்டேன்
பொற்புறு விநாயகனே எங்கும் தெரியக்கண்டேன்
(வானுயர்ந்த...)

## சரணம்

கண்ணைக் கவரும் கணபதியின் தோற்றமெல்லாம்
வண்ணவடிவழகில் வகைவகையாய் நான் கண்டேன்
விண்ணவரும் மண்ணவரும் வந்து வழிபாடாற்ற
வந்திணுவில் பதியுறையும் எங்கள் கணபதியே
(வானுயர்ந்த...)

இராகம் - ஹிந்தோளம்

# இணுவிலுறை கணபதியே...

## பல்லவி

இணுவிலுறை கணபதியே இன்னருள் புரிபவனே
அணுவுக்குள் அணுவாகும் அற்புதமே - அருள்வாய்

## அனுபல்லவி

கோபுரங்கள் நாலுக்குள்ளே நீயிருப்பதென்ன
பாவங்கள் போக்கும் பக்குவம்தான் என்ன
(இணுவிலுறை...)

## சரணம்

கருணைமழை பொழியும் கணபதியே அருள்வாய்
அருமறைகள் போற்றிடும் ஆனைமுகக் கடவுளே
திருவருள் புரிந்தெம்மைக் காத்திடுவாய் நித்தம்
பெருச்சாளி வாகனனே பரராசசேகரனே - (ஐயா)
(இணுவிலுறை...)

இராகம் - மோகனம்

# நின் பாதம் தந்தருள்வாய்...

## பல்லவி

முந்தி வந்த எங்கள் மூத்த கணபதியே தந்தி
முகத்தவனே பரராசசேகரனே
(முந்தி வந்த...)

## அனுபல்லவி

ஊன் சிந்தி உயிர் ஒன்றி உவந்திருக்க உந்தன்
தேன் சிந்தும் மலர்ப்பாதம் தந்தருள்வாய் கணபதியே
(முந்தி வந்த...)

## சரணம்

ஒற்றைக் கொம்பதனால் பாரதம் முழுவதும்
பற்றின்றி பர்வதத்தில் வரைந்த கணபதியே
வெற்றித் திருமகனே வேலனுக்கு மூத்தவனே
பற்றி நின்றோம் நின்பாதம் தந்தருள்வாய் கணபதியே
(முந்தி வந்த...)

இராகம் - ஹம்சத்வனி

# கணபதியை நினை மனமே...

## பல்லவி

கணபதியை நினை மனமே தினம் கணபதியை
நினை மனமே

## அனுபல்லவி

முத்தி தருவான் சித்தி தருவான் சிறப்புகள் யாவும்
தருவான் ஆறுமுகனின் அண்ணன்

(கணபதியை...)

## சரணம்

மூஷிக வாகனன் மோதக கையினன்
தேஷிகன் ஞானக் குருமணி நாயகன்
காசினி போற்றும் கற்பக விநாயகன்
ஆசிகள் பல தந்திடும் ஆனைமுகத்தவன்

(கணபதியை...)

இராகம் - ஆனந்த பைரவி

## அயராது பணிவாய்...

### பல்லவி

ஆனை முகத்தவனை அயராது பணிவாய்
ஞான முதல்வன் அவன் அபயம் அளித்திடுவான்

### அனுபல்லவி

வேதங்கள் போற்றிடும் வேழ முகத்தவன்
பூதகண நாதன் இணுவிலுறை கணபதியாம்
(ஆனை முகத்தவனை...)

### சரணம்

புல்லிலும் புற்று மண்ணிலும் சாணத்திலும்
கல்லிலும் விரும்பி உறையும் கணபதியை
கொல்லும் பிணி தீர்ப்பான் இணுவில் பதியுறைவானை
அல்லும் பகலும் நீ அயராது பணிவாய்
(ஆனை முகத்தவனை...)

இராகம் - சகானா

## மகா கணபதியே வரமருள்வாய்...

### பல்லவி

மகா கணபதியே வரமருள்வாய்
இணுவில் பதி மேவும் பஞ்சமுகனே
(மகா கணபதியே...)

### அனுபல்லவி

நாரையூர் நம்பிக்கு அருள் சுரந்தாய் அன்று நீ
பாரதத்தைப் பர்வதத்தில் வரைந்து வைத்தாய் ஐயா
(மகா கணபதியே...)

### சரணம்

அம்மையும் அப்பனும் உலகமென்றாய்
தம்பியை உலகம் சுற்றச் செய்தாய்
அம்பிகைபாகன் கொடுத்த மாங்கனியை
தும்பிக்கையால் ஏற்று உவந்திருந்தாய் ஐயா
(மகா கணபதியே...)

இராகம் - திஸ்ரநடை (சாபு)

# செந்தமிழில் பாட வரமொன்று தந்திடுவாய்...

## பல்லவி

செந்தமிழில் உனைப்பாடத் தந்திடுவாய் வரமொன்று
வந்தனைகள் பலகோடி தந்திடுவேன் கணபதியே

## அனுபல்லவி

முத்தமிழை ஔவைக்கு உரைத்து மகிழ்ந்தவனே
அத்தி முகத்தவனே ஆறுமுகன் அண்ணனே
(செந்தமிழில்...)

## சரணம்

ஆவணிச் சதுர்த்தியிலே அவதரித்த ஆனைமுகனே
தூமணியே தூங்குகை யுடையவனே தூயவனே
பூமணியே புண்ணியனே புவிகாக்கும் பரம்பொருளே
மாமணியே இணுவில் பதியுறையும் எங்கள் பரராசசேகரனே
(செந்தமிழில்...)

இராகம் - மோகனம்

# வேதனைகள் நீக்கிடுவாய்...

## பல்லவி

வேதமுதல்வனே விண்ணோர் குறைதீர்த்தவனே
வேழமுகத்தோனே வேதனைகள் நீக்கிடுவாய்

## அனுபல்லவி

ஆதி சிவனார் பணிந்த அம்பிகைபாலா
பூதகணநாதா போற்றித் துதித்தோம் உன்னை
(வேதமுதல்வனே...)

## சரணம்

சாபங்கள் தீர்த்திடுவாய் சந்ததி வாழச் செய்வாய்
பாவங்கள் போக்கிடுவாய் பட்டதுயர் நீக்கிடுவாய்
தீபங்கள் ஏற்றி வைப்போம் கீதங்கள் பாடி நிற்போம்
நாமங்கள் பல பாடி அர்ச்சனைகள் செய்திடுவோம்.
(வேதமுதல்வனே...)

இராகம் - சிந்துபைரவி

## சோதனை வைக்கலாமோ...

### பல்லவி

வேதனை போதுமையா ஐங்கரனே கணபதியே
சோதனை எமக்கு நீ வைக்கலாமோ?

### அனுபல்லவி

இணுவில் பதி அமர்ந்த கொற்றவனே குருமணியே
மாண்புடையாய் கணபதியே அருள் தாருமையா
(வேதனை...)

### சரணம்

இந்திரன் வேண்ட அகத்தியர் கமண்டலம் கவிழ்த்தாய்
சந்திரன் சாபம் நீக்கி முப்புரமெரிக்கச் செய்தாய் சங்கரனுக்கு
அன்று நீ உறுதுணையாய் நின்றாய் உமைபாலகனே
இங்கெமைக் காக்க எழுந்தோடி வருவாய்
(வேதனை...)

இராகம் - ஷண்முகப்பிரியா

## சிந்தனை செய் மனமே...

### பல்லவி

சிந்தனை செய் மனமே கணபதியைச்
சிந்தனை செய் மனமே

### அனுபல்லவி

சஞ்சலம் வரும்போது உயிர்த்தஞ்சம் அளித்தருளி
நெஞ்சினில் இருந்தெம்மை காத்திடும் கணபதியை
(சிந்தனை...)

### சரணம்

அம்மையும் அப்பனும் அவன் தானே எமக்கு
மும்மையிலும் அருள்பவன் அவன் தானே
வெம்மை கொடிய நோய் பிணிகள் அணுகாமல்
எம்மை நிதம் காக்கும் கணபதியை கைதொழுது
(சிந்தனை...)

இராகம் - ஆபேரி

ஆதி - கண்டநடை

## மோகனரூபனை நிதம் துதித்திடுவோம்...

பல்லவி

மோகனரூபனை மூஷிகவானனனை
ஞானக் கணபதியை நிதம் துதித்திடுவோம்

அனுபல்லவி

வானவர் போற்றிடும் வாரண முகத்தவனை
ஞானமுங் கல்வியும் சீலமும் அருளும்
(மோகனரூபனை...)

சரணம்

கானக் குறவர் மகள் வள்ளியைக் காதலித்த
ஞானக்குமரனுக்கு நயந்தே அருள்சுரந்த
ஞானக் களிற்றை இணுவில் கணபதியை
ஈனப் பிறவியறுத்து எம்மை ஆட்கொள்ளும்
(மோகனரூபனை...)

இராகம் - தேஷ்

## வல்வினை போக்கிடுவான்...

### பல்லவி

ஆனைமுகனைத் தொழ வல்வினை போக்கிடுவான்
அஞ்சேல் அஞ்சேலென அருள் தருவான் கணபதி

### அனுபல்லவி

முண்டக மல ரெனச் சிவந்த மேனியன் குண்ட
வண்டியன் பரராசசேகரன்
(ஆனைமுகனைத்...)

### சரணம்

அனலால் வெந்து அயர்வுற்ற மக்களைக் காக்க
அனலாசுரனைத் தன் வயிற்றில் அடக்கினான்
புனத்திடை வள்ளிக்குதவிய கருணாநிதியை
தினந்தினம் அறுகால் அர்ச்சிக்க அகங்குளிர்வான்.
(ஆனைமுகனைத்...)

## பதம்

இராகம் - பிலகரி ரூபகதாளம்

# தில்லைத் தரிசனங்கண்டு களிக்கலாமோ...

### பல்லவி

தில்லைத் தரிசனங்கண்டு களிக்கலாமோ - ஐயன்
தில்லை நடராஜன் தரிசனம் கண்டுகளிக்கலாமோ.

### அனுபல்லவி

எந்தன் கவி தீர தில்லையிலாடும் சுந்தர
நடனம் கண்டு களிக்கலாமோ - ஐயன்

(ஐயன்...)

### சரணம்

செஞ்சடையில் சந்திரனும் கங்கையும் அணிந்திருப்பான்
பொங்கரவும் புலித்தோலும் கொன்றையும் சூடிநிற்பான்
அங்கையில் அனலேந்தி டுவான் அவன் தூக்கி நின்றாடும்
குஞ்சித பாதம் கண்டு களிக்கலாமோ.

(ஐயன்...)

## பதம்

இராகம் - ஹம்சத்வனி

# ஆட்டமென்ன சொல்லுவேன்...

### பல்லவி

ஆட்டமென்ன சொல்லுவேன் தோழி
தில்லையில் ஆடும் சிதம்பரநாதன் அவன்

### அனுபல்லவி

மூலப் பொருளானவன் வேதாந்த நாதனவன்
ஆலமுண்ட கண்டன் அம்பலவாணனவன்

(ஆட்டமென்ன...)

### சரணம்

முயலகனை மிதித்துத் தூக்கினான் திருவடியை
தீயகலும் உடுக்கையும் கரங்களிலே ஆட
அபயமுடன் வரதமுங் காட்டி மிகச் சுழன்று
நயமாகவே ஆனந்த நடனம் ஆடினான்

(ஆட்டமென்ன...)

### கண்ட நடை

பைவிரி நாகம் படம் விரித்தாட படர் சடையாட
மைவிழி உமையாட மதியாட மானாட
கொன்றை மாலையாட சங்குவெண் குழையாட
தெய்தா தெய்தா வெனக் கூத்தடினானே - அவன்

(ஆட்டமென்ன...)

## பதம்

இராகம் - பாகேஹி

# பாராமுகம் ஏனையா?...

### பல்லவி

பாராமுகம் ஏனையா சிதம்பரநாதா
பாராமுகம் ஏனையா.....

### அனுபல்லவி

ஈனப் பிறவி படுதுயரம் போக்காயோ
ஊனமிக்க பக்தர் குறை தீராயோ

(பாராமுகம்...)

### சரணம்

பிரம்மனும் இந்திரனும் மற்றுள தேவரும் கண்டறியாப்
பரம்பொருளே பக்தர்குறை கேளாயோ தீராயோ
சிரசினில் கொன்றையும் மதியும் அணிந்தவரே
வரதகரம் அபயகரம் காட்டி நிற்கும் விந்தை ஏனோ ஐயா

(பாராமுகம்...)

## பதம்

இராகம் - காபி

# தில்லை நடராஜன்...

### பல்லவி

தில்லை நடராஜன் நாட்டியத்தின் தலைவன்
எல்லையில்லாக் கருணை வடிவழகன்
(தில்லை...)

### அனுபல்லவி

அண்ட சராசரம் எங்கும் நிறைந்தவன்
ஆட்சியும் அவனே ஆடலும் அவனே
(தில்லை...)

### சரணம்

மாமதுரை மண்ணில் ஆடல்பல புரிந்தான்
சாகசமாகவே பிட்டுக்கு மண்சுமந்தான்
கோமதுரை மன்னனால் பிரம்படியும் பட்டான்
மாமதுரைக் கரசி மீனாட்சி கணவனெடி
(தில்லை...)

இராகம் - கானடா

# தில்லை நடராஜனிடம் தூதுசெல்லடி...

## பல்லவி

எல்லையில்லாக் கருணை வடிவழகன் அந்தத்
தில்லை நடராஜனிடம் தூது செல்லடி கிளியே

## சரணம்

நெற்றிக் கண்ணுடையான் கற்றைச் சடைமுடியான்
பற்றி நின்றாடும் படம் விரித்த பாம்புடையான்
ஒற்றைக் காலூன்றி அரக்கனை மிதித்திருப்பான்
வற்றாத அருள்சுரக்கும் தூக்கிய திருவடியான்
(தில்லை...)

புலித்தோலை உடுத்திருப்பான் புன்சிரிப்புடன் நிற்பான்
கரித்தோலை போர்த்திருப்பான் கனகசபையில் ஆடுவான்
நெருப்பை ஏந்தி நிற்பான் முப்புரி நூலுடையான்
கரத்தில் உடுக்கும் மானும் வைத்திருந்தானெடி - அந்தத்
(தில்லை...)

தில்லையிலே அவன் முன் என்னை நானிழந்தேன்
என்னுள்ளம் பறிகொடுத்தேன் ஊனுருக்கி நின்றேன்
கள்வனவன் காதலினால் மனந்தடு மாறிநின்றேன்
எள்ளளவும் மறந்தறியேன் என்னிலமை உரைத்திடுவாய்
கிளியே
(தில்லை...)

05.09.2017 இல்

## பதம்

இராகம் - சகானா

# நடராஜன் வருவானோடி...

### பல்லவி

நடராஜன் வருவானோடி தில்லை
நடராஜன் வருவானோடி
நானிலஞ் சிறக்க என் நாயகனாய்த் தில்லை
நடராஜன் வருவானோடி

### அனுபல்லவி

ஆதிரை நாளிலவன் என்னை வரச் சொன்னானெடி
பாதிவிழி மூடுகையில் பக்குவமாய் அணைத்தானெடி
(நடராஜன்...)

### சரணம்

சாதி மத பேதமில்லை சந்திரனைச் சூடிநின்றான்
காதிலே கண்டிகையும் கையில் நெருப்புடனே
யானை உரி போர்த்திருந்தான் புலித்தோலுடுத்திருந்தான்
மானையும் வைத்திருந்தான் மனதைக் கவர்ந்தானடி

உள்ளம் பறிகொடுத்தேன் உணர்வையும் நானிழந்தேன்
கள்வனவன் காதலினால் கள்ளத்தனம் செய்துவிட்டான்
என்னைப் பிரிந்து சென்றான் ஒருகணமும் பொறுக்கமாட்டேன்
பொன்னனையாய் என் தோழி இக்கணமே சேர்த்துவிடு.
(நடராஜன்...)

2002 இல்

## பதம்

இராகம் - திலங் திஸ்ரநடை (தகிட தகிட)

# கிளியே தூது செல்லடி...

### பல்லவி

கிளியே தூது செல்லடி அந்த நல்லூர்
முருகனிடம் தூது செல்லடி
(ஆசைக் கிளியே...)

### அனுபல்லவி

உள்ளம் மகிழ்ந்தேன் உணர்வை நான் மறந்தேனடி
கள்ளத்தனத்தால் என்னிடம் காதல் கொண்ட முருகனிடம்
(கிளியே தூது...)

### சரணம்

பச்சை மயில் வாகனன் பவனிவரும் அழகன்மேல்
இச்சை கொண்டு விட்டேனடி இதயம் துடிக்குதெடி
மெச்சிநான் புகழ்ந்தேனடி மேனி தளர்ந்து விட்டேனடி
அச்சம் தீர்த்து என்னை அவன் ஆட்கொள வருவானோடி
(கிளியே தூது...)

கிளியே தூது செல்லடி அந்த வண்ண வடிவழகன்
நல்லூர் முருகனிடம் தூது நீ செல்லடி
அலங்காரக் கந்தன் கார்த்திகேயன் குகன்
சிவசக்திபாலன் சண்முகனிடம் கிளியே தூது செல்லடி
(கிளியே தூது...)

## பதம்

இராகம் - மாண்டு

# இணுவில் முருகனிடம் சரணடைந்தேன்...

### பல்லவி

இணுவில் முருகனிடம் சரணடைந்தேன்
இணையடிகள் நாளும் தொழுது நின்றேன்

### அநுபல்லவி

நொச்சியோலை முருகா கார்த்திகைக் குமரா
கச்சியப்பர் குறைதீர்த்து தமிழ் தந்த முருகா
(இணுவில் முருகன்...)

### சரணம்

பக்தர் கட்கருள்பவனே பச்சைமயில் வாகனனே
சித்தர் பலரைத் தோற்றுவித்த வித்தகனே வேலவனே
முத்தி தருபவன் நீ மூவா இளையவன் நீ எமக்குச்
சித்தி தந்தருள்வாய் சிறியோமைக் காத்தருள்வாய்
(இணுவில் முருகன்...)

பதம்

இராகம் - அமிர்தவர்சினி

# இணுவில் முருகனைச் சிந்தனை செய்வாய்...

## பல்லவி

இணுவில் முருகனைச் சிந்தனை செய்வாய் மனமே
மாணிணுவை முருகனைச் சிந்தை செய்வாய் மனமே
(இணுவில் முருகன்...)

## அனுபல்லவி

கைலை வாசன் திருமகன் முருகன்
குஞ்சரி வள்ளி மணாளன் முருகனை
(சிந்தனை செய்...)

## சரணம்

சூரனை வென்று தேவர் சிறை மீட்ட செல்வன்
தீரன் இணுவையம் பதியுறையும் முருகன்
சங்கமிருந்த தமிழ்ப்புலவன் கலியுக வரதன்
தங்கத் தாமரைத் தொட்டிலில் வளர்ந்த சரவணனை
(சிந்தனை செய்...)

## பதம்

இராகம் - ஹம்சத்வனி

# சிந்தாகுலம் தீர்த்தருள்வாய்...

### பல்லவி

சிந்தா குலம் தீர்த்தருள்வாய் கந்தா கடம்பா
எந்தாய் இணுவிலுறை முருகா
(சிந்தா குலம் ...)

### அனுபல்லவி

தொந்திக் கணபதிக்கு இளையவனே
தந்தைக்கு உபதேசம் செய்தமுருகா.
(சிந்தா குலம் ...)

### சரணம்

வஞ்சகரை அழித்தொழிக்க அருள் சுரந்து
வெஞ்சமரில் வேலெறிந்து விளையாடினாய்
குஞ்சரியை மணந்து பரங்குன்றில் கொண்டாடினாய்
தஞ்சமென வந்த அடியவரைக் காத்து நின்றாய்
(சிந்தா குலம் ...)

உ
ஓம்









கலாபூஷணம், பண்டிதை
திருமதி.வை.கணேசபிள்ளை